**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 03.07.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இளநிலை மாணவர் சேர்க்கை – 2026 தரவரிசைப் பட்டியல் வெளியீட்டு விழா

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (TNAU) இளநிலை மாணவர் சேர்க்கை – 2026 தரவரிசைப் பட்டியல் வெளியீட்டு விழா, 03.07.2026 அன்று, தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் அமைந்துள்ள டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு தமிழ்நாடு அரசின் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. ர. வினோத் அவர்கள் முன்னிலை வகித்தார். விழாவில் தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ரா.விஜய் சரவணன் அவர்கள், வேளாண்மை உற்பத்தி ஆணையரும், தமிழ்நாடு அரசின் வேளாண்மை – உழவர் நலத்துறை செயலாளருமான முனைவர் பி. சங்கர், I.A.S அவர்கள்,தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர். ரேவதி, I.A.S அவர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்&பொறுப்பு துணைவேந்தர் முனைவர் கா. சுப்பிரமணியன் அவர்கள், பல்கலைக்கழகத்தின் இளநிலை (வேளாண்மை) , முதன்மையர் முனைவர் சி. பாபு, டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் முனைவர் கு.இரா. ஜகன்மோகன் அவர்கள் பங்கேற்றனர்.

விழாவின் தொடக்கமாக வருகை தந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கு மலர்க்கொத்து வழங்கி வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து, கல்லூரி பண்ணை வளாகத்தில் தென்னை நாற்றுகள் நடவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தேசிய மாணவர் படை (NCC) சார்பில் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

பின்னர் அரங்கில் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு, குத்துவிளக்கு ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து வரவேற்புரை நிகழ்ந்தது. அதன்பின் மாண்புமிகு அமைச்சர் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இளநிலை மாணவர் சேர்க்கை – 2026 தரவரிசைப் பட்டியலை மாண்புமிகு அமைச்சர் திரு. ர.வினோத் அவர்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார். தரவரிசை பட்டியலில் முதல் 10 இடங்களை மாணவ, மாணவியரான செல்வி மெர்லின், செல்வன் மாதவராஜன், செல்வி சந்தியா, செல்வி ராகவி, செல்வன் அனிஷ் குமார், செல்வன் கோகுல்பிரியன், செல்வன் மனோஜ், செல்வி பிரியங்கா, செல்வி யாஷிகா ஷீத்தல் மற்றும் செல்வி பிரியவதனா ஆகியோர் முறையே பெற்றுள்ளனர். பின்னர் மாணவர்களிடையே உரையாற்றிய அவர், வேளாண்மைக் கல்வியின் முக்கியத்துவம், நவீன தொழில்நுட்ப வேளாண்மை, இயற்கை வளங்களைப் பாதுகாத்து நிலையான வேளாண் வளர்ச்சியை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு ஆகியவற்றை வலியுறுத்தி, மாணவர்கள் சிறந்த கல்வி மற்றும் ஆராய்ச்சியின் மூலம் நாட்டின் வேளாண் முன்னேற்றத்திற்கு பங்களிக்க வேண்டும் என வாழ்த்துத் தெரிவித்தார்.

இறுதியாக தேசிய கீதம் இசைக்கப்பட்டு விழா நிறைவடைந்தது. தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**